# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

# S.C.No.56/2020

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.3** |
| **Name** | **:** | **திரு. சேகர்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.10.2022.**

**முதல் விசாரணை -**

**நான் எட்டிவாடி கிராமத்தில் வசிக்கிறேன். பயிர்வேலை செய்து வருகிறேன். இறந்த கண்ணன் என்னுடைய மச்சான். அ.சா.2 என்னுடைய தங்கை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் மச்சான் கண்ணன் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். 15ஆம் தேதி மூன்று வருடத்திற்கு முன்பு 6ஆம் மாதம் இரவு 8.30 மணிக்கு சுமாருக்கு குய்யோ முய்யோ என்று அடித்த சத்தம் கேட்டது. எப்போதும் எதிரியும் என் தங்கை வீட்டுக்காரரும் சண்டை போட்டுக்கொள்வார்கள். நிலத்திற்காக தான் சண்டை போடுவார்கள். தங்கச்சி வீட்டுக்காரர் நிலம் வழியாக தான் எதிரி**

செல்லவேண்டும். அன்றைக்கும் அவ்வாறு தான் சண்டை என்று நான் மாட்டை கட்டிவிட்டு போனேன்.

நான் போகும்போது சாமி மண்டையின் மீது எதிரி தேக்கு கொம்பால் அடித்துவிட்டார். அதில் அந்த கொம்பு இரண்டாக பிளந்து விட்டது. இரண்டாக பொளந்த கட்டையில் ஒன்றை எடுத்து சாமி எதிரியை அடித்துவிட்டார். இரண்டாக பொளந்த கட்டையில் எதிரி தஞ்சியப்பன் கண்ணனின் இடது மார்பில் குத்திவிட்டார். குத்திய பிறகு கண்ணன் அப்படியே சாய்ந்துவிட்டார்.

சாமிக்கு மண்டையில் அடிப்பட்டு ரத்தம் வந்ததால் நான் வடமாதிமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு களம்பூர் காவல்நிலையத்தில் அழைத்ததால் சென்றபோது விசாரணை செய்தார்கள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கண்ணன் விழுந்தவுடன் உயிர் போய்விட்டது. கண்ணனின் பிரேதத்தை போலிசார் காரில் ஆரணி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். மறுநாள் காலை 6 மணிக்கு நான் பிரேதத்தை மருத்துவமனையில் வைத்து பார்த்தேன்.

எதிரி பயன்படுத்திய பொருளை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். பெரிய கொம்பால் சாமியை அடித்தார். சின்னகொம்பால் எதிரி கண்ணனை குத்தினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு எழுத படிக்க தெரியாது. கையொப்பம் மட்டும் போடுவேன். கண்ணன் வீட்டில் இருந்து என்னுடைய வீடு ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் அதற்கும் குறைவாக தான் உள்ளது. என்னுடைய வீடு 2,3

வளைவை தாண்டி உள்ளது என்றால் சரி தான். பாதாள பாலம் தொடங்கும் இடத்தில் கண்ணன் வீடும், முடியும் இடத்தில் பன்னீர், ஏழுமலை வீடும் உள்ளது என்றால் சரி தான். பன்னீர் என்னுடைய உறவினர். ஏழுமலை உறவினர் அல்ல. ரயில்வே ரோடு தாண்டி வலது பக்கம் இருப்பவர் வீடு சரவணன் வீடும், இடது பக்கம் ராமநாதன் வீடும் உள்ளது.

கண்ணன் நிலத்திடம் இருந்து 300 அடி தொலைவில் சரவணன், ராமநாதன் வீடு உள்ளது என்றால் சுமார் 150 அடி தொலைவில் இருக்கும். ரயில்வே அடிப்பாலம் கட்டுவதால் போக்குவரத்திற்காக கண்ணன் அவருடைய ஒரு ஏக்கர் நிலத்தை வழி பாதைக்கு வாடகைக்கு விட்டிருந்தார் என்றால் சரி தான். ரயில்வே அடிப்பாலம் கட்டுவதற்காக சம்பவத்திற்கு 2,3 மாதத்திற்கு முன்பே பணியாளர்கள் வந்துவிட்டனர் என்றால் சரி தான். ரயில்வே பணியாளர்கள் தங்குவதற்காக ஒரு கூடாரமும், பொருட்களை வைப்பதற்காக ஒரு கண்டெய்னரும் கண்ணன் நிலத்தில் ரயில்வே பாதையை தாண்டி போடப்பட்டிருந்தது என்றால் சரி தான்.

பொருட்களை பாதுகாக்க ரயில்வே ஒப்பந்ததாரர்கள் கண்ணனையும், அய்யப்பனையும் காவலர்களாக போட்டு வைத்திருந்தனர் என்றால் சரி தான். ரயில்வே பாதைக்கு கொடுக்கப்பட்ட இடத்திற்கு அடுத்து வைக்கோல் போர், அதன்பிறகு எதிரி மாடு கட்டும் இடம் என்றால் வைக்கோல் போர் இல்லை. மாடு கட்டும் இடத்திற்கு பக்கத்திலேயே தான் எதிரியின் வீடு உள்ளது என்றால் சரி தான். கண்ணன் வீட்டிற்கு எதிரேயும் பணியாளர்கள் தங்குவதற்கு கூடாரம் இருந்தது என்றால் சரி தான்.

கண்ணன் வீட்டிற்கு அடுத்து ரோடு, அதன் பிறகு ஒரு ஏக்கர் நிலம்

அதனை தாண்டி வந்தால் தான் ரயில்வே டிராக் வரும் என்றால் சரி தான். பிரதான சாலையில் தஞ்சியம்மன் கோயிலுக்கான வளைவு உள்ளது என்றால் சரி தான். அந்த வளைவை ஒட்டி இடது பக்கத்தில் வறட்டு குட்டையும் அதற்கான பாதையும் செல்கிறது என்றால் என்றால் சாட்சி வறட்டு குட்டை உள்ளது, அதற்கான பாதை இப்போது தான் உள்ளது, அப்போது கிடையாது என்று சாட்சியம் அளிக்கிறார். குட்டைக்கு கரை உள்ளதா என்றால் உள்ளது. குட்டைக்கு மேல்புறம் எதிரியின் நிலமும், கண்ணனின் நிலமும் உள்ளது என்றால் சரி தான்.

ரயில்வேக்காக விடப்பட்ட வழி தடத்தில் பொதுமக்கள் போய் வர கண்ணன் அனுமதித்தார் என்றால் சரி தான். வழக்கமாக வறட்டு குட்டை பக்கமாக போகும் எதிரி எப்போதாவது ஒருமுறை பொது வழியில் வந்தால் கண்ணன் எதிரியுடன் சண்டை போடுவார் என்றால் எப்போதாவது சண்டை வரும். நிலம் சம்பந்தமாக எதிரிக்கும் கண்ணனுக்கும் ஏற்கனவே நடந்த தகராறிற்காக காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்களா என்றால் கொடுக்கவில்லை. முதல் விசாரணையில் சொன்ன குய்யோ முய்யோ என்ற சத்தம் ஒரு மணி நேரம் கேட்டதா என்றால் அரை மணி நேரம் கேட்டது. மேற்படி சத்தத்தினால் அடிக்கடி நடக்கும் சண்டை தான் என்றும், சமாதானமாகி விடுவார்கள் என்றும் இருந்துவிட்டேன். இந்த சங்கதியை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

வழக்கமாக எதிரிக்கும் கண்ணனுக்கும் சண்டை நடக்கும்போது நான் தான் விலக்கிவிடுவேன். ஊரில் அழகேசன் என்பவரும் பஞ்சாயத்திற்கு வருவார். யார் நிலத்தில் மாடு மேய்த்துக்கொண்டு இருந்தேன் என்றால்

என்னுடைய நிலத்தில் தான் மாடு மேய்த்துக்கொண்டு இருந்தேன். எனக்கு சுமார் 6 மாடு உள்ளது. எதிரிக்கு 10,15 மாடுகள் உள்ளது என்றால் சரி தான். மாட்டை கட்டிவிட்டு போனேன் என்ற விவரத்தை போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொல்லவில்லை. என் நிலத்தில் இருந்து அன்றைய தினம் நான் நடந்து தான் வந்தேன்.

சம்பவத்தில் சாமியை அடிக்க பயன்படுத்திய கொம்பு இரண்டாக பிளந்தது சம்பந்தமாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இரண்டாக பிளந்த ஒரு கட்டையை எடுத்து அ.சா.1 சாமி எதிரியை அடித்தது சம்பந்தமாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். இரண்டாக பிளந்த ஒரு கட்டையை எடுத்து எதிரி கண்ணனின் இடது மார்பில் குத்தியது சம்பந்தமாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

மருத்துவமனையில் சிகிச்சைக்கு பிறகு களம்பூர் காவல்நிலையம் சென்றது சம்பந்தமாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணையில் இறந்தவரை காரில் அழைத்துச் சென்றதை நான் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எதிரிக்கு அடிப்பட்டது போல் எதிரியின் மனைவி பவானிக்கும் அடிப்பட்டது என்றால் சரி தான். பவானியை யார் அடித்தது என்றால் சாமி அடித்தார். அடிப்பட்டது சம்பந்தமாக பவானி கொடுத்த புகாரின் அடிப்படையில் களம்பூர் போலிசார் சாமி மற்றும் மற்றவர்கள் பெயரில் வழக்கு போட்டார்கள் என்றால் வழக்கு பற்றி தெரியாது. ஆனால் புகார் கொடுத்தது பற்றி கேள்விப்பட்டேன்.

சம்பவம் அரைமணி நேரம் நடந்திருக்குமா என்றால் நடந்திருக்கும்.

பன்னீர், ஏழுமலை, ராமநாதன், அய்யப்பன் ஆகியோர் சம்பவம் நடக்கும்போது தடுத்து சமரசம் செய்தனர் என்றால் இல்லை முடிந்த பின்னர் தான் வந்தனர். நான் பார்த்ததாக சொல்லப்படும் சம்பவத்தை ரயில்வே பணியாளர்களும் டென்டில் இருந்து வந்து பார்த்தார்கள் என்றால் அவர்கள் எல்லாம் வெளியிலேயே வரவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எதிரி தஞ்சியப்பன் சாமியையோ, இறந்த கண்ணனையோ தாக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் சம்பவத்தை நேரிலேயே பார்க்கவில்லை என்றாலும், போலிசார் என்னை நேரில் பார்த்த சாட்சியாக காட்டியுள்ளதால் அதற்காக பரிந்து தான் நான் முதல் விசாரணையில் உள்ள சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் நேரில் பார்த்தால் தான் சாட்சியம் அளித்துள்ளேன். அன்றைய தினம் எதிரி வழக்கமாக வரும் வறட்டு குட்டை வழியாக வராமல் பொது பாதை வழியாக வந்தார் என்றால் வறட்டு குட்டை வழியாக தான் வந்தார்.

ரயில்வே பொது பாதை வழியாக எதிரி வந்ததால் கண்ணனும் சாமியும் அவரை கேவலமாக திட்டிக்கொண்டு எதிரி வீட்டிற்கு சென்று எதிரி வீட்டின் அருகில் வைத்து எதிரியையும் அவருடைய மனைவியையும் தாக்கினார்கள் என்று சொன்னால் சிறுநீர் கழித்தது சம்பந்தமாக எதிரி பேசியதால் கண்ணன் மற்றும் அ.சா.1,2 கேட்க சென்று சம்பவம் நடந்தது. சிறுநீர் கழித்த சம்பவமானது போலிசார் சொல்லிக்கொடுத்து போடப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல.

எதிரி வீட்டிடம் போய் கண்ணன் மற்றும் சாமியும் அடித்தனர் என்றாலும், அக்கம்பக்கத்தினரும், ரயில்வே பணியாளர்களும் தடுத்தனர்

என்றால் பணியாளர்கள் யாரும் குடிசை விட்டு வெளியே வரவில்லை. அக்கம்பக்கத்தினர் சம்பவம் முடிந்த பிறகு தான் வந்தனர். கண்ணன், சாமி, கண்ணன் மனைவி ஆகியோர் கேட்டதால் தான் சம்பவமே நடந்தது. எதிரி வீட்டிடம் போகவில்லை. அக்கம் பக்கத்தினர் மற்றும் ரயில்வே பணியாளர்கள் தடுத்து விலக்கிவிட்டபோது கீழே விழுந்ததில் தான் கண்ணனுக்கும் சாமிக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. கண்ணன் இறப்பிற்கு எந்தவிதத்திலும் எதிரி காரணம் இல்லை என்றாலும், சாமிக்கு காயம் ஏற்பட்டதற்கும் எதிரி காரணம் இல்லை என்றால் எதிரி தான் காரணம். இறந்தவர் என் தங்கை கணவர் என்பதாலும், அ.சா.1 தங்கையின் மகன் என்பதாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் பார்த்ததை தான் சொல்கிறேன். அப்போது செல்போன் பயன்பாடே என்னிடம் இல்லை. கண்ணன், அ.சா.1 அப்போது செல்போன் வைத்திருந்தார்கள்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.